# கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் - யக்கல

# 2026ஆம் ஆண்டுக்காக வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்

2026 ஆம் ஆண்டுக்காக கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கல், கட்டிட புனரமைப்பு மற்றும் நிர்மாணத்திற்காக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ உள்நாட்டு பிரதிநிதிகள்/ விநியோகஸ்தர்கள்/ சிவில் பொறியியல் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அனைத்து பிரதான பிரிவுக்காகவும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா வைப்புத் தொகை ஒன்றை பதிவுக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும்.

2. மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பதிவுக் கட்டணத்தை மக்கள் வங்கி யக்கல கிளையின் கணக்கு இலக்கம் 333-1001-1-0000059 என்ற கணக்கிற்கு செலுத்தி, அந்தப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சாதாரண வேலை நாட்களில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 வரை கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு அலுவலக நாட்களில் பணமாக செலுத்த முடியும். காசுக் கட்டளை (Money Order), வங்கி வரைவு (Bank Draft) அல்லது காசோலைகள் ஏற்கப்படாது என்பதை கருத்திற் கொள்ளவும்.

3. விண்ணப்பங்களை பெறுவது 2025.11.25 ஆம் திகதி தொடக்கம் 2025.12.16ஆம் திகதி வரையான காலத்தில், சாதாரண வேலை நாட்களில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 வரை கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் சிறாப்பர் கருமபீடம் அல்லது பல்கலைக்கழக இணையதளம் ஊடாக தரவிறக்கம் செய்ய முடியும். https://gwu.ac.lk/index.php/notices

4. பொருட்கள்/ சேவைகள்/ நிர்மாண பிரிவுக்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - I. வர்த்தகப் பதிவு சான்றிதழ், வழங்குநர்களின் மற்றும் ஒப்பந்ததாரர்களின் துறைகள் சார்ந்த மற்ற அனுமதிப் பத்திரங்களின் பிரதிகள்
   - II. வெட் பதிவுச் சான்றிதழின் பிரதி

5. தகுதியை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யப்படாது என்பதோடு வைப்புத் தொகை மீளளிக்கப்படாது என்பதை தயவுடன் கருத்திற் கொள்ளவும். அரச திணைக்களம்/ சபை/ கூட்டுத்தாபனம் மேலுள்ள ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய தேவையில்லை.

6. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை அதற்காக தயாரித்த விண்ணப்பப் படிவத்துடன் கடித உறை ஒன்றில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2026'' என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை உதவி காசாளர் (வழங்கல் பிரிவு) கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், கண்டி வீதி, யக்கல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் வழங்கல் பிரிவுக்கு 2025.12.16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்க முடியும்.

7. எந்த ஒரு விண்ணப்பப் படிவத்தையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் முழு உரிமை பல்கலைக்கழகம் வசமானது. ஏதேனும் வழங்குநர் ஒருவர் விலைமனுக்கோரலுக்கு அமைய குறித்த விபரக் குறிப்புகளுக்கு அமைய குறித்த காலத்திற்கு பொருட்கள் அல்லது சேவையை பெற்றுத்தருவதற்கு தவறினால் முன் அறிவித்தல் இன்றி பதிவை இடைநிறுத்தும் உரிமை பல்கலைக்கழகம் வசமானது. முழுமை பெறாத விண்ணப்பங்கள் மற்றும் முந்தைய வருடங்களில் குறித்த விபரக்குறிப்புகள் மற்றும் குறித்த காலத்திற்கு பொருட்கள் அல்லது சேவையை பெற்றுத்தருவதற்கு தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பதிவில் இருந்து நீக்கப்படும்.

8. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் பெறப்படும் என்பதோடு போட்டிரீதியான விலைமனு பெறும் எதிர்பார்ப்புடன் வேறு வழங்குநர்களிடம் இருந்தும் விலைமனுக்கோரும் உரிமை பல்கலைக்கழகம் வசமானது.

9. பதிவு செய்யும் அனைத்து வழங்கல் மற்றும் ஒப்பந்ததாரர்களும் 30 நாட்கள் குறைந்தபட்ச கடன் கால வரம்புக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

10. பதிவு செய்வதற்குத் தேவையான வழங்குநர்களுக்கு அல்லது ஒப்பந்ததாரர்களுக்கு அதற்காக பதிவு செய்வதற்குத் தேவையான விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

    தொலைபேசி இலக்கம்: 033-2222740/ 033-2222748 (நீடிப்பு – 113) மின்னஞ்சல்: supplies@gwu.ac.lk

**செயலாளர்,**
**கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்,**
**கண்டி வீதி, யக்கல.**
**2025.11.25**